## அரையாண்டுப் பொதுத்தேர்வு – 2017
## பத்தாம் வகுப்பு – தமிழ் முதல் தாள்
## விடைக் குறிப்புகள்

6 X 1 = 6

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ. எண்பத்தொன்று 2. ஆ. சடையப்பவள்ளல் 3. இ. மூங்கில்
4. ஆ. பெரியார் 5. அ. திருவாசகம் 6. ஆ. பன்னிரெண்டாம் வகுப்பு

6 X 1 = 6

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

7. மணிமேகலையும் 8. திலகவதியார் 9. முதுமொழி மாலை
10. நகர்த்தும் வண்டியில் 11. தால்சுதாய் 12. இராமலிங்க அடிகள் (வள்ளலார்)

4 X 1 = 4

பொருத்துக.

13. சிங்காதனம் 14. குற்றமில்லாத 15. புலி 16. ஓய்வெடுத்தல்

4 X 1 = 4

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

(17 – 20 பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)

17. அகம், புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தவர் யார்?
18. அம்பேத்கர் யாருடைய பெயரைத் தம் பெயராக வைத்துக்கொண்டார்?
19. சித்த மருத்துவம் என்பது யாது?
20. மேடைப் பேச்சில் கேட்கின்றவனை எவ்வாறு மதித்தல் வேண்டும்?

5 X 2 = 10

**மூன்று வரி வினா – செய்யுள்**

21. 1. காலமறிந்து இடத்தோடு பொருந்தி செயல்பட்டால் உலகம் கருதினுங் கைகூடும்

22. 1. துடியென்னும் பறை உடையவன். 2. வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன்.
3. தோல் செருப்பணிந்தவன் 4. இருள் போன்ற கரிய நிறத்தையுடையவன்.
5. மேகக்கூட்டம் திரண்டு வந்தாற்போல மிகுதியான படைபலம் உடையவன்.

23. 1. திருநாவுக்கரசர் 2. அப்பூதியடிகளிடம் கூறியது.

24. 1. தே + வாரம் - தெய்வத்தைப் பற்றிய இன்னிசைப் பாடல்கள்
2. தே + ஆரம் - தெய்வத்திற்கு அணியும் பூமாலை போன்ற பாமாலை.

25. 1. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

26. 1. அழகிய மணிக்கரத்தினால் 2. தலையையும் முகத்தையும் தடவியருளினார்.

27. 1. சான்றோர் வழி அறிந்து நடத்தல்

5 X 2 = 10

**மூன்று வரி வினா – உரைநடை**

28. 1. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்

29. 1. ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல்
2. ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவாகும்.

30. 1. உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளை செய்திப்படங்கள் மூலம் அறியலாம்.

31. 1. வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் சமநிலையே உடல் உறுதியாக இருப்பதற்கு காரணமாகும்.

32. 1. கதர் இயக்கம் 2. மது விலக்கு 3. தீண்டாமை ஒழிப்பு

33. 1. அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)

34. 1. மருத்துவம், வேளாண்மை, பொறியியல், சட்டம் மற்றும் தொழில்நுட்பத்துறை (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)

## ஆறு வரி வினா – செய்யுள்

3 X 4 = 12

35. 1. கொற்றவையும் அல்லள்
2. பிடாரியும் அல்லள்
3. பத்ரகாளியும் அல்லள்
4. காளியும் அல்லள்
5. துர்க்கையும் அல்லள்
6. சிலம்பைக் கையில் ஏந்தி பெண் ஒருத்தி நம் வாயிலின் முன்னே நிற்கிறாள்.

36. 1. இராமனது வரலாற்றை கூறும் நூல்
2. கம்பர் இயற்றிய நூல் கம்பராமாயணம் எனப்பட்டது.
3. இந்நூலுக்கு இராமாவதாரம் என கம்பர் பெயரிட்டார்.
4. ஆறு காண்டங்களை உடையது.
5. தமிழுக்கு கதி என அழைக்கப்படுகிறது.

37. 1. அரசனால் சிறப்பு அடைவது, யானை, தேர், குதிரையில் அரசர் முன் செல்வது செல்வமன்று.
2. அது அவரவர் முன் வினைப் பயன் மட்டுமே.
3. புகலிடம் வந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வம் எனச் சான்றோர் கூறுகின்றனர்

38. 1. தனது நீண்ட வால் தரையில் அடித்து, உடல் நிமிர்ந்து, நான்கு கால்களையும் மடித்து, தரையின் மேல் படித்திருந்தது.
2. இரண்டு கண்களும் நெருப்பு பொறிகளைக் கக்க, வெண் பற்கள் ஒளிவிட, வாயில் புலால் நாற்றம் வீச, காட்டில் சினத்தோடு இருந்தது.

39. 1. பணியை முடித்து ஓய்வு பெறுக.
2. தம்பி! இனிக்கும் செய்திகள் உன் மனதில் வந்து குவியும்.
3. செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை.
4. செடியின் வெற்றி பூவில் உள்ளது.
5. நமது வெற்றிகளால் துன்பங்கள் யாவும் ஓடிவிடும்.

3 X 4 = 12

## ஆறு வரி வினா – உரைநடை

40. 1. சடங்குகளையும், மூடநம்பிக்கைகளையும் களைவதில் உறுதியாக உள்ளம் படைத்தவராக இருந்தார் பெரியார்.
2. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமா?
3. சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு எனக்கூறி குழந்தைத் திருமணத்தை நீக்கப் பாடுபட்டார்.

41. 1. 1908 – எல்பின்ஸ்டன் பள்ளி – உயர்நிலைப் படிப்பு
2. 1912 – பம்பாய் எல்பின்டஸ்டன் கல்லூரி - இளங்கலைப் பட்டம்
3. 1915 – கொலம்பியா பல்கலைக்கழகம் - முதுகலைப் பட்டம்
4. 1916 – லண்டன் - பாரிஸ்டர் பட்டம்

42. 1. கேட்போரைத் தன்வயப்படுத்தும் முறையில் தொடங்குதல் வேண்டும்.
2. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்குதல் வேண்டும்.
3. ஓரிரு மணித்துளிகளில் பொருளில் புகுந்துவிட வேண்டும்
4. இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப அமைதல் வேண்டும்.

43. 1. உழவுத் தொழில் செய்பவரே உயர்ந்தவர்
2. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்
3. உழவுக்குச் சிறப்புப் பெற்றது மருத நிலம்.
4. மருத நிலம் வயலும் வயல் சாரந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருக்கிறது.

44. 1. அரிச்சந்திரன் நாடகம்
2. உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரன்
3. அரிச்சந்திரனை பொய் பேச வைக்க, பல இன்னல்களை உருவாக்குகிறார் விசுவாமித்திரர்.
4. நாடு, மனைவி, மகன் இழப்பினும் பொய் சொல்லேன்
5. அரிச்சந்திரனின் வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தியடிகள் தாம் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என்று உறுதி கொண்டார்

**பாடல் வினா** 5

45. 1. தமிழ் விடு தூது 2. திகழ்பா - புகழ்பா, நல்லேர் - சொல்லேர்
3. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா 4. பா + இனங்கள் 5. புலவர்கள்

**பத்தி வினா** 5 X 1 = 5

46. 1. இலக்கிய கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை.
2. குரலோசையும் 3. அணு ஆற்றலுக்கு ஒப்பாகும்
4. உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், சிறு சிறு கதைகள் முதலியன அமையப்பேசுவதே சிறந்த பேச்சாகும். 5. எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி எனப்படும்.

**பத்து வரி வினா** 2 X 8 = 16

47. அ. 1. அப்பூதியடிகள், திருநாவுக்கரசரை அமுதுண்ண அழைத்தார்.
2. அமுது படைக்க வாழக்குருத்து அரிந்து வருமாறு தம் மகனை அனுப்பினார்.
3. மூத்த திருநாவுக்கரசரை பாம்பு தீண்டியது.
4. திருநாவுக்கரசர் திருநீறு அணிவிக்க மூத்த திருநாவுக்கரசரை அழைத்தார்.
5. அப்பூதியகள் இப்போது இங்கு அவன் உதவான் என்றார்.
6. திருநாவுக்கரசர், மூத்த திருநாவுக்கரசு இறந்ததை அறிந்தார்.
7. ஒன்றுகொலாம் என்னும் திருப்பதிகம் பாடி உயிர்த்தெழச் செய்தார்.

(அல்லது)

ஆ. 1. தம்மினும் அறிவில் சிறந்த பெரியோதை உறவினராய் கொண்டு அவர் வழியில் நடத்தல் வேண்டும்.
2. அது வலிமைகளில் எல்லாம் சிறந்த வலிமை ஆகும்.
3. அறிவிற் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடப்பவர்கள் வல்லவர்கள்.
4. அவர்களுக்குப் பகைவர் செய்யக்கூடிய தீங்கு எதுவும் இல்லை.

5. கடிந்து அறிவுரை கூறும் பெரியோரைத் தமக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.
6. அப்படிக் கொள்ளாதவர் தனக்குப் பகைவரே இல்லை எனினும் கெடுவர்.
7. நல்லவர் ஒருவர் தொடர்பினைக் கைவிடுதல், பலரின் பகைமையைத் தேடிக்கொள்வதைக் காட்டிலும் பத்து மடங்கு தீமையைத் தேடிக் கொள்வதற்கு சமம் ஆகும்.

48. அ. 1. பெண்கள் கல்வி பெறுவது உரிமை
2. சமூக மாற்றம்
3. ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்.
4. உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தரவேண்டும்.
5. கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருத்தல் கூடாது.
6. சமுதாயத்திற்கு தொண்டாற்ற வேண்டும்.
7. சொத்துரிமை வழங்க வேண்டும்.
8. அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணி பெற வேண்டும்.

(அல்லது)

ஆ. 1. உலகம் தன்னையும் ஞாயிற்றையும் சுற்றி வருகிறது என்பதை தெரிந்திருந்தால் சுற்றுதல் என்ற பொருளுடைய உலவு என்னும் சொல்லிலிருந்து உலகம் என்று பெயரிட்டனர்.
2. உலகம் எந்தவிதப் பற்றுகோடுமின்றி அண்ட வெளியில் தொங்கிக் கொண்டிருப்பதால் தொங்குதல் என்ற பொருளுடைய ஞால் சொல்லிருந்து ஞாலம் என்று பெயரிட்டனர்.
3. ஐவகை மணிகளும் ஒளிவிடும் திரத்தினால் வெவ்வேறு பெயர்களை கொண்டுள்ளன. ஆனால் அவற்றின் மூலப்பொருள் ஒன்றே என்பதை சிலப்பதிகாரத்தில் இருந்து அறிகிறோம்.
4. ஓர் அணுவினை சதக்கூறிட்ட கோணினும் உளன் எனக் கம்பரின் வரிகளில் இருந்து அணுச்சேர்ப்பு, அணுப்பிரிப்பு பற்றிய கருத்துக்களை அறிகிறோம்.
5. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் என்னும் திருக்குறள் வரிகளில் இருந்து தமிழ் மருத்துவத்தின் தொன்மையை அறிகிறோம்.
6. பதினெண் சித்தர்களால் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவம் ஆயிற்று.
7. புல்லாகிப் பூடாய் என்ற திருவாசக வரியிலிருந்து பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சிப் பற்றி அறிகிறோம்
8. மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும் என்ற திருவாசக வரிகளில் இருந்து கருவியல் அறிவு பற்றி அறிகிறோம்.

.

**மனப்பாடப்பகுதி**

2 + 2 + 6 = 10

49. அ. அருவினை என்ப உளவோ, கருவியாற்
காலம் அறிந்து செயின்.

ஆ. அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

இ. மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனாக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.

ஆ. பன்னீர் செல்வம்
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்)
அரசு உயர்நிலைப் பள்ளி
கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 9940731517
மின்னஞ்சல் : inikavi117@gmail.com

